# காப்புறுதி (Insurance)

காப்புறுதி செய்பவரினால் தவணைக் கட்டணம் செலுத்துவதற்கும் காப்புறுதி அபாயங்கள் காரணமாகக் காப்புறுதி செய்பவருக்கு ஏற்படக்கூடிய நட்டத்திற்காக காப்புறுத்துவோன் இழப்பீடு கொடுப்பதற்கும் காப்புறுதி செய்பவருக்கும் காப்புறுத்துவோருக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாடொன்றே காப்புறுதி என அழைக்கப்படும்.

**காப்புறுதியுடன் தொடர்புடைய தரப்பினர்கள்**

- 1ம் தரப்பு – காப்புறுதி செய்பவர்
- 2ம் தரப்பு – காப்புறுதி நிறுவனம்/காப்புறுத்துவேன்
- 3ம் தரப்பு – இழப்பீட்டை பெறும் வெளித்தரப்பினர்

## காப்புறுதி ஒப்பந்தம் Insurance policy / Agreement

காப்புறுதி செய்யவிருக்கும் சொத்து / ஆயுள் தொடர்பில் காப்புறுதி பாதுகாப்பு ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்திருக்கும் நபரினால் சமர்பிக்கப்படும் காப்புறுதி முன்மொழிவு பத்திரமொன்றினை காப்புறுதி நிறுவனத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அவ்விரு தரப்பினர்களும் இடையே ஏற்படுத்திக்கொள்ளப்படும் சட்டரீதியான எழுத்து மூலமான உடன்படிக்கை காப்புறுதி ஒப்பந்தம் ஆகும்.

**காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றுடன் தொடர்புடைய தரப்பினர்கள்**

1ம் தரப்பு – காப்புறுதி செய்பவர்

2ம் தரப்பு – காப்புறுதி நிறுவனம்/காப்புறுத்துவேன்

**காப்புறுதி ஒப்பந்தமொன்றில் காணப்படும் விடயங்கள்**

- காப்புறுதி நிறுவனத்தின் பெயரும் முகவரியும்

- காப்புறுதி செய்பவரின் பெயர், முகவரி
- ஒப்பந்தத்தொகை / ஒப்பந்த பெறுமதி
- ஒப்பந்தகாலம்
- தவணைக்கட்டணத்தின் அளவும் செலுத்தப்படும் கால எல்லையும்
- நட்டம் ஏற்படுவதற்கான காரணங்கள்
- சொத்து / ஆயுளின் விபரம்
- ஒப்பந்தத்தின் தன்மை

**காப்புறுதி ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தும் அடிப்படை தேவைகள்**

- சட்டரீதியான இணைப்பு காணப்படுதல் வேண்டும்
- காப்புறுதி செய்பவரின் கொடை முனைவு / முனைவு காணப்படுதல் வேண்டும்
- காப்புறுதி நிறுவனம் அதனை ஏற்றுக்கொள்ளல் வேண்டும் / ஏற்புடமை
- சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடையில் பெறுமதிகள் பரிமாற்றப்படல் வேண்டும்

## இடர் / ஆபத்து – Risk

ஒருவருடைய ஆயுளிற்கு / சொத்திற்கு பணவடிவில் நட்டத்தை ஏற்படுத்த கூடிய அனைத்தும் இடர் / ஆபத்து ஆகும்

காப்புறுதியில் இடர் என்பதை பின்வருமாறு 2 வகைப்படுத்த முடியும்

- காப்புறுத்தக் கூடிய இடர்
- காப்புறுத்த முடியாத இடர்

**காப்புறுதி செய்யக்கூடிய இடர் Insurable Risk**

ஆயுளுக்கு / சொத்திற்கு பணவடிவில் இழப்பு ஏற்படுகின்ற போது அவ்விழப்பினை காப்புறுதியூடாக இழப்பீடு செய்யக்கூடியவாறு காணப்படுகின்ற போது அவ்விடர் காப்புறுத்தக் கூடிய இடர் எனக்கொள்ளப்படும்

Eg - தீ அபாயம்
களவு அபாயம்
விபத்து அபாயம்

**காப்புறுத்தக்கூடிய இடர் ஒன்றின் பண்புகள்**

- இழப்பானது பணவடிவில் அளவிடக்கூடியதாக இருத்தல் வேண்டும்
- ஏற்பட்ட இழப்பாக இருத்தல் வேண்டும் அதாவது ஏற்படுத்தப்பட்டதாக இருக்கக்கூடாது
- இடரை எதிர்வு கூறக்கூடியதாக இருக்க வேண்டும்
- உறுதிப்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்
- நட்டமானது வேறு காப்புறுதி நட்டங்களுடன் தொடர்புபடாததாக இருத்தல்

**காப்புறுத்த முடியாத இடர்கள்** Non Insurable Risk

ஒருவருடைய ஆயுளிற்கு / சொத்திற்கு ஏற்பட்ட இழப்பினை காப்புறுதியூடாக இழப்பிடு செய்ய முடியாத வேளையில் அவ்வாறான இடர்கள் காப்புறுத்த முடியாத இடர்களாகும்.

E.g :- 1. பணத்தினால் அளவிட முடியாத நட்டங்கள்
* அன்பு, மனக்கவலை

* கருணை
* பாசம்

2. தோல்விகள்
    * காதல் தோல்வி
    * பரீட்சை தோல்வி
    * விளையாட்டு தோல்வி

3. இயற்கையாக ஏற்படும் நட்டங்கள்
    * இளமை குறைவடைதல்
    * தலைமுடி நரைத்தல்
    * இரும்பு துருப்பிடித்தல்
    * இறப்பு
    * பெறுமானத்தேய்வு

4. நாகரீக மாற்றத்தால் ஏற்படும் நட்டங்கள்

5. வழக்கமாக ஏற்படும் வியாபார நட்டங்கள்
    * அறவிடமுடியாக்கடன்

6. முகாமையின் கவனயீனங்களால் ஏற்படும் நட்டங்கள்
    * போதைப்பொருள் வியாபாரம்

**காப்புறுதியில் நட்டங்களைப் பகிர்தல் Pulling of Risk**

இழப்பு ஏற்படும் எனக்கருதப்பட்டு காப்புறுதிக்காக தவணைக்கட்டணம் செலுத்திய பலரிடமிருந்து பணத்தை அறவீடு செய்து இழப்பு ஏற்பட்ட ஒரு சிலருக்கு இழப்பீடாக வழங்குதல் காப்புறுதியில் நட்டத்தை பகிர்தல் என்பர்

**காப்புறுதியின் முக்கியத்துவங்கள்**

A - மக்கள் சமூகத்திற்கு

- மரணம், உடல் ரீதியான இழப்புக்கு இழப்பீட்டைப் பெறமுடியும்

- திருமணம், கல்வி ஆகிய நிகழ்வுகள் கொடுப்பனவுகளைப் பெறமுடியும்
- தொழிலாளர்களிற்கான நட்டஈடு விவசாயிகளுக்கான ஓய்வூதியம் என்பவற்றின் மூலம நிதிப்பாதுகாப்பை பெறமுடியும்
- திடீர் விபத்து நோய்வாய்ப்படுதல் சத்திரசிகிச்சை என்பவற்றிற்கு ஏற்படக்கூடிய இழப்புக்களை ஈடுசெய்ய முடியும்

B – வணிகத்திற்கு

- கட்டடம், தொழிற்சாலை என்பவற்றிற்கு தீயினால் ஏற்படக்கூடிய இழப்புகளிற்கு இழப்பீட்டைப் பெறமுடியும்
- பொருட்கள் மற்றும் பணம் களவாடப்படுவதனால் ஏற்படக்கூடிய நட்டங்களிற்கு இழப்பீட்டை பெறமுடியும்
- போக்குவரத்தின் போது பொருட்களிற்கு ஏற்படக்கூடிய நட்டங்களிற்கு இழப்பீட்டைப் பெறமுடியும்
- ஏற்றுமதி வியாபாரத்தில் ஏற்றுமதி வருமானத்தை வசூலிக்க முடியாத வேளையில் / தாமதமாகின்ற வேளையில் இழப்பீட்டைப் பெறமுடியும்

C – பொருளாதாரத்திற்கு / நாட்டிற்கு

- காப்புறுதி நிறுவனங்கள் மூலதனச்சந்தையில் நிதித்தரகாரகத் தொழிற்படுகின்றமை
- பல்வேறு காப்புறுதி திட்டங்களை அறிமுகம் செய்வதன் ஊடாக பாதுகாப்புக்களை வழங்குதல்
- காப்புறுதி தொழிற்பாட்டின் மூலம் வேலை வாய்ப்புக்களை வழங்கப்படுகின்றமை

## காப்புறுதி கொள்கைகள் / காப்புறுதி தத்துவங்கள்
## Principles of Insurance

காப்புறுதி செயற்பாடுகளை வினைத்திறமையாக மேற்கொள்வது தொடர்பில் காப்புறுதி நிறுவனத்தால் பின்பற்றப்பட்டு வரும் மரபுகளும் நடைமுறைகளும் காப்புறுதித் தத்துவங்களாக அவையாவன

- ➢ காப்புறுத்தக்கூடிய உரிமை / அக்கறை
- ➢ உச்சநம்பிக்கை தத்துவம் / மிகுஉயர் நம்பிக்கை தத்துவம்

- இழப்பீட்டுத்தத்துவம் / நட்டஈட்டுத்தத்துவம்
- பகிர்தல் தத்துவம் / பங்களித்தல் தத்துவம் / அங்கத்துவத் தத்துவம்
- பதிவாள் வைப்பு தத்துவம்
- அண்மைக்காரணி தத்துவம்

**காப்புறுத்தகூடிய உரிமை / காப்புறுதி செய்யக்கூடிய உரிமை / அக்கறை Insurable Interst**

காப்புறுதி செய்யப்படுகின்ற சொத்து / ஆயுள் தொடர்பில் காப்புறுதி செய்பவருக்கு **சட்டரீதியான உரிமை** காணப்பட வேண்டும் என்பதே காப்புறுதி செய்யக்கூடிய உரிமையாகும்.

**ஆயுள் காப்புறுதி தொடர்பிலான காப்புறுத்தக் கூடிய உரிமைகள்**

- ✓ ஒருவர் தன்னுடைய ஆயுளை வரையறையற்ற தொகைக்கு காப்புறுதி செய்ய முடியும்
- ✓ ஒருவர் தனது வாழ்க்கை துணையின் மீது காப்புறுதி ஏற்படுத்த முடியும் (கணவன் மனைவியின் ஆயுளிற்கும் மனைவி கணவனுடையஆயுளிற்கும் காப்புறுதி செய்ய முடியும்)
- ✓ கடன்கொடுத்தோர் கடன்பட்டோரில் ஆயுளைக்காப்புறுதி செய்ய முடியும் (கடன் தொகைக்கு மட்டும்)

**பொதுக்காப்புறுதியில் காப்புறுதி செய்யக்கூடிய உரிமை காணப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள்**

- கட்டடங்களின் உரிமையாளர்கள் தமது கட்டிடங்களிற்கு தீக்காப்புறுதியை மேற்கொள்ள முடியும்
- கட்டங்களை ஒப்பந்தம் / குத்தகை அடிப்படையில் எடுத்தவர்கள் குத்தகைக்காலம் வரை காப்புறுதி செய்ய முடியும்
- மோட்டார் வாகன உடமையாளர்கள் தமது மோட்டார் வாகனங்களிற்கு காப்புறுதி ஏற்படுத்த முடியும்

- தங்க ஆபரணங்கள் மற்றும் சொத்துக்களை அடகு பிடிப்போர் முதிர்வு காலம் வரை ஏற்படுத்த முடியும்

**Note :- 1**

ஆயுள் காப்புறுதியை மேற்கொள்கின்ற போது காப்புறுதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் போது உரிமை காணப்படுவது போதுமானதாகும். அதாவது இழப்பு ஏற்படுகின்ற போது உரிமை அவசியமில்லை

**Note :- 2**

மோட்டார் வாக விபத்துக்காப்புறுதி தொடர்பில் இழப்பு ஏற்படுகின்ற பொழுது உரிமை கட்டாயம் காணப்படுதல் வேண்டும்

**Note :- 3**

கடலபாயக்காப்புறுதியின் போது காப்புறுதி செய்கின்ற போது இழப்பு எடுக்கின்ற போதும் உரிமை கட்டாயம் காணப்படுதல் வேண்டும்

**உச்சநம்பிக்கைத்தத்துவம் / மிகு உயர் நம்பிக்கை தத்துவம்**

**Utmost good faith**

காப்புறுதி செய்யப்படுகின்ற ஆயுள் / சொத்து தொடர்பில் காப்புறுதி செய்பவருக்கும் காப்புறுதி நிறுவனத்திற்கும் இடையில் பரஸ்பரம் உண்மையான தகவல் பரிமாற்றத்தில் ஈடுபட வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் தத்துவம் உட்சநம்பிக்கை தத்துவமாகும்.

**உட்ச நம்பிக்கைத்தத்துவத்தின் நோக்கம் / முக்கியத்துவம்**

பார்த்தோ / பரிசோதித்தோ அறிய முடியாத உண்மைகளை கேட்டறிதல் என்பதாகும்

**உட்நம்பிக்கைத்தத்துவத்தினை பேணுவதற்கு உதவும் ஆவணம் / படிவம்**

- காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்படும் ஆலோசனைப் படிவம்

**ஆயுள் காப்புறுதி தொடர்பில் உட்ச நம்பிக்கைத்தத்துவத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள்**

A – காப்புறுதி செய்பவரால் காப்புறுதி நிறுவனத்துக்கு

- முழுப்பெயர்
- பிறந்த திகதி
- வயது
- தேசிய அடையாள அட்டை இலக்கம்
- தொழில் நிலை
- தொழில் மேல் உள்ள ஆபத்து
- திருமணநிலை
- வருமான மட்டம்
- பொதுவான ஆபத்துக்கள்
- பௌதீக உடலியல் தன்மை
- தங்கியிருப்போர் தொடர்பான விபரங்கள்

B - காப்புறுதி நிறுவனத்தால் காப்புறுதி செய்பவருக்கு வெளிப்படுத்த வேண்டிய விடயங்கள்

- காப்புறுதி வகை
- ஒப்பந்த தொகை
- ஒப்பந்தகாலம்
- தவணைக்கட்டணம் செலுத்தும் கால எல்லையும் தவணைக் கட்டணத்தின் அளவும்
- புதுப்பித்தல் முறைகள்
- பிறநன்மைகள்

**உச்சநம்பிக்கை தத்துவம் மீறப்படும் சந்தர்ப்பங்கள்**

- போதுமான தகவல்களை வழங்க தவறுதல்
- வேண்டுமென்று தகவல்களை வழங்காது இருத்தல்
- பொய்யான தகவல்களை வழங்குதல்

**உட்சநம்பிக்கை தத்துவம் மீறப்படும் போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**

- இழப்பீட்டை தடுத்து நிறுத்துதல்
- இழப்பீட்டு கோரிக்கையை நிராகரித்தல்
- இழப்பீட்டு கோரிக்கையை இரத்து செய்தல்
- சட்டநடவடிக்கை எடுத்தல்

## இழப்பீட்டு தத்துவம் / நட்டஈட்டு தத்துவம் Indiminity

காப்புறுதி செய்யப்பட்ட சொத்து ஒன்றுக்கு பணவடிவில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டுள்ளதோ அவ்வளவு தொகையோ / அதற்கு உட்பட்ட தொகையோ இழப்பீடாக வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் தத்துவமே இழப்பீட்டு தத்துவம் ஆகும்.

- இத்தத்துவம் ஆயுள் காப்புறுதிக்கு பொருந்தாது
- இதன் பிரதான நோக்கம் காப்புறுதியில் யாரும் இலாபம் அடையக்கூடாது

## குறைக்காப்புறுதி – Under Insurance

சொத்து ஒன்றின் நடைமுறை சந்தை விலையை காட்டிலும் குறைவான பெறுமதிக்கு காப்புறுதி ஒப்பந்த ஒன்றை ஏற்படுத்தியிருப்பின் அக் காப்புறுதி குறைக்காப்புறுதி ஆகும்.

இங்கு குறித்த சொத்தானது முழுமையான நட்டமடைகின்ற பொழுது காப்புறுதி தொகையை இழப்பீடாக வழங்கப்படும். குறித்த சொத்துக்கு பகுதி அளவில் நட்டமேற்படுகின்ற பொழுது விகிதாசார அடிப்படையில் இழப்பு வழங்கப்படும்

Eg;- 500 000 ரூபா பெறுமதியான மோட்டார் வாகனத்தை
300 000 ரூபாவிற்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.

01. இந்த மோட்டார் வாகனம் முழுமையாக நட்டமடைந்தால் இழப்பீட்டு தொகை யாது?

300 000 ரூபா

02. குறித்த மோட்டார் வாகனம் விபத்தில் சிக்கி ஏற்பட்ட இழப்பு 100000 ரூபாஆகும். இழப்பீட்டு தொகை யாது?

$$\frac{300\ 000}{500\ 000} \times 100\ 000$$

60000 ரூபா ஆகும்

## மிகைக்காப்புறுதி – Over Insurance

சொத்தொன்றின் நடைமுறை சந்தை விலையை காட்டிலும் உயர்வான பெறுமதிக்கு காப்புறுதி ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தல் மிகைக்காப்புறுதி ஆகும்.

இங்கு சொத்து முழுமையாக அழிவடைந்தாலும் சொத்தின் பெறுமதியே இழப்பீடாக வழங்கப்படும். மாறாக பகுதியளவில் நட்டமடைகின்ற போது மதிப்பிடப்பட்ட நட்டமே இழப்பீடாக வழங்கப்படும்

Eg:- ˙500 000 ரூபா பெறுமதியான மோட்டார் வாகனத்தை 700 000 ரூபாவுக்கு காப்புறுதி செய்யப்பட்டதாக கருதுக

1. சொத்து விபத்து ஒன்றில் முழுமையாக சேதமடைந்து இருப்பின் இழப்பீடு யாது?

500 000 ரூபா

2. சொத்து விபத்தில் சேதமடைந்த போது மதிப்பிடப்பட்ட நட்டம் 100 000 ரூபா ஆயின் இழப்பீட்டு தொகை யாது?

100 000 ரூபா

## இரட்டை காப்புறுதி – Dual Insurance

குறித்த ஒரு சொத்துக்கு சொத்தின் உடமையாளரே ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதி நிறுவனங்களின் காப்புறுதி செய்யப்பட்டு இருந்தால் அது இரட்டை காப்புறுதி ஆகும்.

Note :- ஆயுள் காப்புறுதி ஆயின் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனத்தின் காப்புறுதி செய்யப்படுகின்ற போது ஆயுளுக்கு இழப்பீடு ஏற்படுகின்ற பொழுது ஒவ்வொரு நிறுவனமும் ஒப்பந்தத் தொகையும் அதற்கான பங்கு இலாபத்தினை வழங்கும் ஆனால் பொதுகாப்புறுதி ஆயின் விகிதாசார அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படும்

**Eg** : - A என்பவர் 5 இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் வாகனத்தை X,Y,Z எனும் காப்புறுதி நிறுவனங்களின் முறையே 200000 200000 100000 என்னும் தொகைக்கு காப்புறுதி செய்திருத்தல்

## மீள் காப்புறுதி Re Insurance

காப்புறுதி செய்யப்பட்ட சொத்து ஒன்றினை சொத்தின் உடமையாளரின் முன் அனுமதியுடன் குறித்த காப்புறுதி நிறுவனம்

குறித்த சொத்துக்கு வேறு காப்புறுதி நிறுவனங்களின் காப்புறுதி ஒப்பந்தத்தினை ஏற்படுத்தி இருத்தல் மீள் காப்புறுதி ஆகும்
பொதுவாக பெறுமதி கூடிய சொத்துகளுக்கு மீள் காப்புறுதி வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றது

**Eġ** : ராஜா என்பவர் 500 000 ரூபா பெறுமதியான காரினை X எனும் காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்துள்ளார். X காப்புறுதி நிறுவனம் குறித்த சொத்தினை ராஜாவின் அனுமதியினை பெற்று P,Q,R எனும் காப்புறுதி நிறுவனங்களின் முறையே 200 000, 200 000, 100 000 எனும் தொகைக்கு காப்புறுதி செய்துள்ளனர்.

**பகிர்தல் தத்துவம் / அங்கத்துவ தத்துவம் - Contribution**

குறித்த ஒரு சொத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களில் காப்புறுதி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்ற போது குறித்த சொத்துக்கு இழப்பு ஏற்பட்டால் இழப்பீடு எவ்வாறு வழங்கப்பட வேண்டும். என்பதனை வலியுறுத்தும் தத்துவமே பகிர்தல் தத்துவமாகும். இங்கு குறித்த சொத்து முழுமையாக அழிவடைந்தால் ஒவ்வொரு காப்புறுதி நிறுவனமும் ஒப்பந்தத்தொகையை இழப்பீடாக வழங்கும்.

Eg :- ராஜா என்பவர் தனது 500000/= பெறுமதியான காரினை P,Q,R எனும் காப்புறுதி நிறுவனங்களில் முறையே 200000, 200000, 100000 எனும் தொகைக்கு காப்புறுதி செய்துள்ளார். குறித்த கார் விபத்துக்குள்ளாகி முழுமையாக சேதம் அடைந்தது எனின் ஒவ்வொரு காப்புறுதி நிறுவனம் வழங்க வேண்டிய தொகை யாது?

| | | இழப்பீட்டு தொகை |
|---|---|---|
| ராஜா 500 000 → | P 200 000 | 200 000 |
| | Q 200 000 | 200 000 |
| | R 100 000 | 100 000 |
| | | 500 000 |

சொத்து பகுதியளவில் நட்டமடையுமாயின் விகிதாசார அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படும்

Eg : ராஜா என்பவர் தன்னுடைய 500000/= பெறுமதியான காரினை P,Q, R எனும் காப்புறுதி நிறுவனங்கள் முறையே 200000,

200000, 100000 தொகைக்கு காப்புறுதி செய்துள்ளார். குறித்த விபத்துக்குள்ளாவதனால் ஏற்பட்ட இழப்பின் மதிப்பு தொகை 100000 ஆகும். இழப்பீட்டு தொகை மதிப்பீடு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| ராஜா → | P | 200 000 | $\frac{200000}{500000} * 100000$ | 40000 |
| ராஜா → | Q | 200 000 | $\frac{200000}{500000} * 100000$ | 40000 |
| ராஜா → | R | 100 000 | $\frac{100000}{500000} * 100000$ | 20000 |
| | | | | 100000 |

**பதிலாள் வைப்பு தத்துவம் - Subrogration**

காப்புறுத்தப்பட்ட சொத்து ஒன்றிற்கு 3ம் தரப்புக்களால் இழப்பு ஏற்படுகின்ற போது காப்புறுதி நிறுவனத்தின் சம்மதமின்றி அவர்களிடம் இழப்பீட்டை பெறமுடியாது எனவும் அவர்களிற்கு இழப்பீட்டை பெறமுடியாது எனவும் அவர்களிற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கான அனுமதியினையும் வெளிப்படுத்துகின்ற தத்துவம் பதிலாள் வைப்பு தத்துவமாகும்

**பதிலாள் வைப்பு கடிதம் Subrogration Letter**

காப்புறுதி செய்யப்பட்ட சொத்து தொடர்பில் 3ம் தரப்புக்களால் இழப்பு ஏற்படுகின்ற வேளையில் அவர்களிடம் இருந்து நேரடியாக இழப்பீட்டை பெற மாட்டோம் என்பதனையும் அவர்களிற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு காப்புறுதி நிறுவனத்திற்கு அனுமதியினையும் வழங்கி காப்புறுதி செய்வோரால் காப்புறுதி நிறுவனத்திற்கு வழங்கப்படும் கடிதம் பதிலாள் வைப்பு கடிதமாகும்.

**அண்மைக்காரணித்தத்துவம் - Proximate course**

காப்புறுதி செய்யப்பட்ட சொத்து / ஆயுளிற்கு எக்காரணிகளால் இழப்பு ஏற்படும் என கருதி காப்புறுத்தப்பட்டுள்ளதோ அக்காரணிகளால் இழப்பு ஏற்படுகின்ற போது மட்டுமே இழப்பீடு வழங்கப்படும் என்பதை வலியுறுத்தும் தத்துவம் அண்மைக்காரணித் தத்துவமாகும்


Note :- ஆயுள் காப்புறுதிக்கு பொருத்தமற்ற தத்துவங்கள்

- இழப்பீட்டு தத்துவம்

- பகிர்தல் தத்துவம்
- பதிலாள் வைப்பு தத்துவம்

**காப்புறுதியின் வகைகள் - Types of Insurance**

- ஆயுள் உறுதி – life Assurance
- பொதுக்காப்புறுதி – Gentral Insurance




**ஆயுள் உறுதி – Life Assurance**

காப்புறுதி செய்பவர் குறிப்பிட்ட தவணைக்கட்டணத்தை செலுத்த இணங்கி காப்புறுதி அளிப்போருக்கு செலுத்துமிடத்து குறிப்பிட்ட காலமுடிவில் / இறப்பின் போது / இயலாமை ஏற்படும் போது / வேறு ஏதேனும் சம்பவங்களினால் இழப்புக்கள் ஏற்படுகின்ற வேளையில் அவரிற்கு / தங்கி வாழ்வோருக்கு வரையறுக்கப்பட்ட தொகையினை வழங்குவதாக உறுதியளித்து காப்புறுதி செய்பவருக்கும் காப்புறுதி நிறுவனத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தம் ஆயுள் உறுதியாகும்

**ஆயுள் உறுதியின் சிறப்பம்சம்**

ஒப்பந்த காலம் முடியும் வரை காப்புறுதி செய்ாவர் உயிருடன் இருப்பின் ஒப்பந்த தொகையும் அதற்குரிய பங்கு இலாபங்களும்

ஏனைய வெகுமதிகளும் வழங்கப்படும் எனவே இது ஓர் கட்டாய சேமிப்பு ஆகும்

**ஆயுள் காப்புறுதி ஆயுள் உறுதி என அழைக்கப்படுவதற்கான காரணம்**

ஆயுளிற்கு இழப்பு என்பது (இறப்பு) நிச்சயிக்கப்பட்ட நிகழ்வாக காணப்படுவதால் இது ஆயுள் உறுதி என அழைக்கப்படுகின்றது.

**ஆயுள் காப்புறுதி மூலம் இழப்பீட்டைப் பெறுவதற்கான காரணங்கள்**

- இறப்பு
- உடல்நலக்குறைவு
- உடலூறுகளின் இழப்புக்கள்
- வைத்தியசாலை செலவுகள்
- சத்திரசிகிச்சை

**ஆயுள் காப்புறுதியின் கட்டுப்பணம் / தவணைப்பணம்**

ஆயுள் காப்புறுதியை ஏற்படுத்திய நபர் குறிப்பிட்ட காலப்பகுதி வரை (ஒப்பந்தகாலம் வரை) குறிப்பிட்ட கால இடைவெளியில் காப்புறுதி நிறுவனத்துக்கு தொடர்ச்சியாக செலுத்தும் பணம் தவணைக்கட்டணம் ஆகும்

**ஆயுள் காப்புறுதியில் தவணைக்கட்டணத்தை தீர்மானிக்கும் காரணிகள்**

- ஒப்பந்த தொகை
- ஒப்பந்த காலம்
- காப்புறுதி செய்வோரின் வயது
- தொழிலின் தன்மை
- அபாயத்தின் தன்மை
- சேதம் ஏற்படக்கூடிய தன்மைகள்

**ஆயுள் காப்புறுதியில் பங்கு இலாபம்**

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தை மேற்கொண்ட நபரிற்கு காப்புறுதி நிறுவனம் வழங்கப்படும் இலாபப்பங்கே ஆயுள்காப்புறுதி பங்கு இலாபமாகும்

**ஆயுள் காப்புறுதியில் கடன்பெறுமானம்**

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்ட நபர் அவசர நிதி நெருக்கடிகளைச் சந்திக்கின்ற வேளைகளில் குறித்த காப்புறுதி நிறுவனத்தில் வைத்து இதுவரை செலுத்திய கட்டணத்தில் கடன்பெற முடியும் இதுவே ஆயுள்காப்புறுதியில் கடன்பெறுமானமாகும்.

**செயலற்றுப்போன ஆயுள்காப்புறுதி ஒன்றைப் புதுப்பிக்கும் முறைகள்**

- சாதாரண புதுப்பித்தல் திட்டம்
- விசேட புதுப்பித்தல் திட்டம்

**சாதாரண புதுப்பித்தல் திட்டம்**

குறிப்பிட்ட சில மாதங்களுக்கு ஆயுள்காப்புறுதி செய்த தவணைக்கட்டணத்தை செலுத்தாத வேளையில் செயலற்றுள்ள காப்புறுதி ஒப்பந்தமொன்றை இதுவரை செலுத்தாத தவணைக்கட்டணத்தையும் அதற்குரிய தண்டப்பணத்தினையும் ஒரே தடவையில் செலுத்துவதன் மூலம் குறித்த ஆயுள்காப்புறுதியை மீள செயல்படுத்துகின்ற முறை சாதாரண புதுப்பித்தல் திட்டமாகும்.

**விசேட புதுப்பித்தல் திட்டம்**

தொடர்ச்சியாக நீண்ட காலமாக ஆயுள்காப்புறுதி செய்த நபர் ஒருவர் தனது காப்புறுதிக்கான தவணைக்கட்டணத்தை செலுத்தாத வேளையில் நிலுவயையாக உள்ள காலப்பகுதியால் செயலற்று இருக்கும் ஆயுள்காப்புறுதியில் முதிர்வு காலத்தை நீடித்து குறித்த ஆயுள் காப்புறுதியை செயல்படுத்துகின்ற முறை விசேட புதுப்பித்தல் திட்டம் ஆகும்.

**ஆயுள் காப்புறுதியை மேற்கொண்ட நபர் ஒருவர் தொடர்ச்சியாக தவணைப்பணம் செலுத்த முடியாத வேளைகளில் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள்**

- செலுத்திய காப்புறுதி பூட்கையாக மாற்றுதல்
- ஒப்படைப்பு பெறுமானமாக மாற்றுதல்

**ஒப்படைப்பு பெறுமானம்**

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டவர் தொடர்ச்சியாக தவணைப்பணத்தை செலுத்த முடியாத வேளையில் / செலுத்த விரும்பாத வேளையில் இதுவரை செலுத்திய தவணைக்கட்டணத்தில் குறித்த ஒரு சதவீதத்தை ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதன் மூலம் பெற்றுக்கொள்ளுதல் ஒப்படைப்பு பெறுமானமாகும்.

Eg :- 10 வருட ஆயுள் காப்புறுதி ஒப்பந்தமாக 10இலட்சம் ரூபா ஒப்பந்தத்தை மேற்கொண்ட ஒருவர் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் 5 இலட்சம் ரூபா வரையில் தவணைக்கட்டணமாக செலுத்தியுள்ளார். இவர் தொடர்ச்சியாக தவணைப்பணத்தை செலுத்த விரும்பாத வேளையில் இதுவரை செலுத்திய 5 இலட்சம் ரூபாவில் ஏறத்தாழ 75% வரை ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதன் மூலம் உடனடியாகப் பெறமுடியும்.

**செலுத்திய காப்புறுதி பூட்கையாக மாற்றுதல்**

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தை மேற்கொண்ட நபர் தொடர்ச்சியாக ஆயுள்காப்புறுதித் தவணைப்பணத்தை செலுத்த முடியாத வேளையில் / செலுத்த விரும்பாத வேளையில் இதுவரை செலுத்திய தொகை ஒப்பந்ததொயையாக மாற்றி ஒப்பந்த முடிவில் அத்தொகையினைப் பெற்றுக்கொள்ளும் முறை செலுத்திய காப்புறுதி பூட்கையாகும்

Eg:- 10 இலட்சம் ரூபா காப்புறுதித்தொகையினை 10 வருட காப்புறுதி ஒப்பந்தத்தை மேற்கொண்ட நபர் 5 ஆண்டுகள் 5இல் ரூபா வரை தொடர்ச்சியாக தவணைக்கட்டணத்தை செலுத்தியுள்ளார். தொடர்ச்சியாக தவணைக்கட்டணத்தை செலுத்த முடியாததால் இதுவரை செலுத்திய 5 இலட்சம் ரூபாவினை ஒப்பந்தத் தொகையாக மாற்றி 10வருட ஒப்பந்தமுடிவில் பெற்றுக்கொள்ளுகின்ற முறை செலுத்திய காப்புறுதி பூட்கையாகும்.

**ஆயுள் காப்புறுதியின் வகைகள்**

- கால வரைக்காப்புறுதி
- ஆதார நிதிக்காப்புறுதி
- முழு ஆயுள் காப்புறுதி

- ஆண்டுத்தொகையும் ஓய்வூதியமும்

**காலவரைக்காப்புறுதி**

குறிப்பிட்ட காலத்திற்கே மேற்கொள்ளப்படும் காப்புறுதி கால வரையக்காப்புறுதியாகும். குறிப்பிட்ட காலத்தினுள் இறப்பு / இயலாமை ஏற்படுகின்ற போது காப்புறுதித் தொகை இழப்பீடாக வழங்கப்படும்.

**ஆதார நிதிக்காப்புறுதி**

குறிப்பிட்ட காலத்தினுள் / அதற்கு முன்னர் மரணம் ஏற்படுகின்ற வேளையில் இழப்பீடு வழங்கப்படுகின்ற காப்புறுதி ஆதார நிதிக்காப்புறுதியாகும்.

இக்காப்புறுதி காப்புறுதி செய்தவருக்கு மலிவானதாகும். ஆத்துடன் கட்டுபபணம் சமதொகையாக காணப்படும்.

**முழு ஆயுள் காப்புறுதி**

ஒருவருடைய ஆயுள் முழுவதும் நிலைத்திருக்கும் வகையிலான காப்புறுதி முழுஆயுள் காப்புறுதியாகும்.
இங்கு காப்புறுதி செய்பவர் மரணம் வரை தொடர்ச்சியாகத் தவணைப்பணம் பணம் சமனாக காணப்படும்.
Note :- சில காப்புறுதி நிறுவனங்கள் முழு ஆயுள்காப்புறுதியில் 65 வயதிற்கு பின்னர் தவணைப்பணத்தைக் செலுத்தத்தேவையில்லை என்ற வரையறையைக் கொண்டது

**ஆண்டுத்தொகையும் ஓய்வூதியமும்**

இவை இரண்டும் இளைப்பாறும் போது / முதுமையின் போது கிடைக்கக்கூடிய நன்மைகளை உள்ளடக்கிய காப்புறுதித்திட்டங்களாகும்
இங்கு ஆண்டுத்தொகையை என்பது தனி / தொடர் கொடுப்பனவாக ஆயுள் முழுவதும் தவணையடிப்படையில் வழங்கப்படும்.
இங்கு ஓய்வூதியம் என்பது ஒருவரின் ஓய்வு காலத்தில் / மரணம் வரை மாதம் மாதம் வழங்கப்படும் நன்மையாகும்.

**பொதுக்காப்புறுதி Gentral Insurance**

ஒருவருடைய சொத்துக்களிற்கு இழப்பு ஏற்படுகின்ற போது இழப்பீட்டை வழங்குவதாக உறுதியளித்து காப்புறுதி செய்பவருக்கும்

நிறுவனத்திற்குமிடையில் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தம் பொதுக்காப்புறுதியாகும் / அபாயக்காப்புறுதி

**பொதுக்காப்புறுதியின் வகைகள்**

- கடலாபயக்காப்புறுதி
- களவு அபாயக்காப்புறுதி
- தீ அபாயக்காப்புறுதி
- மோட்டார் வாகன விபத்துக்காப்புறுதி
- பொறுப்புக் காப்புறுதி
- வழிப்பணக் காப்புறுதி
- வழிப்பொருட் காப்புறுதி
- இயற்கை அனர்த்த காப்புறுதி

**கடலாபயக்காப்புறுதி – Marine Insurance**

கடல் பயணத்தின் போது கப்பலுக்கோ கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களுக்கோ கப்பல் பயணிகளுக்கோ ஏற்படக்கூடிய இழப்புகளுக்காக நட்டஈட்டைப் பெறும் நோக்குடன் காப்புறுதி நிறுவனத்துடன் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தம் கடலாபயக்காப்புறுதியாகும்

முதல் முதலில் உருவான காப்புறுதி வகை இதுவேயாகும். (இத்தாலி நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது) தொடர்ந்து காப்புறுதி நிறுவனமயப்படுத்தப்பட்டது இங்கிலாந்தில் ஆகும்.

**கடல் பயணத்தின் போது ஏற்படும் அபாயங்கள்**

- கப்பல் மூழ்குதல்
- தரை தட்டுதல்
- பாதகமான காலநிலை
- தீப்பிடித்தல்
- கப்பலில் வெடிப்பு ஏற்படுதல்
- இயந்திரம் கோளாறுகள்
- கலவரங்களால் ஏற்படும் நட்டங்கள்
- பொருட்களை ஏற்றி இறக்குகின்ற போது ஏற்படும் நட்டங்கள்
- கப்பல் விபத்துக்குள்ளாதல்

**கடல் பயணத்தின் போது ஏற்படக்கூடிய அபாயங்களுக்காக இழப்பீட்டை பெறமுடியாத சந்தர்ப்பங்கள்**

- பொருட்களை இயல்பாகவே அழுகுதல்
- பூஞ்சணம் பிடித்தல்
- துருப்பிடித்தல்
- தானாக எரிதல்

**கடலபாயக் காப்புறுதியின் வகைகள்**

- கப்பல் காப்புறுதி / கப்பல் தண்டக்காப்புறுதி Hall Insurance
- கப்பல் சரக்குக்காப்புறுதி – Cargo Insurance

**கப்பல் காப்புறுதி / கப்பல் தண்டக்காப்புறுதி** Hall Insurance

கடல் பயணத்தின் போது கப்பலிற்கு மட்டும் ஏற்படும் நட்டங்களிற்கு இழப்பீட்டை வழங்குவதற்காக உருவாக்கப்படுகின்ற காப்புறுதி ஒப்பந்தமே இதுவாகும்.

பொதுவாக காப்புறுதி ஒப்பந்தமானது 1ஆண்டு முதிர்வு கொண்டது இருப்பினும் பயணம் குறித்தும் இக்காப்புறுதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்படலாம்.

**கப்பல் தண்ட காப்புறுதி அடிப்படையில் மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்த வகைகள்**

01. சகல இடர் ஒப்பந்தம்
02. பூரண நட்டத்தை மட்டும் செலுத்தும் ஒப்பந்தம்
03. துறைமுக ஒப்பந்தம்
04. பழுதுபார்த்தல் ஒப்பந்தம்
05. நிர்மான சேத ஒப்பந்தம்

**கப்பல் சரக்குக்காப்புறுதி காப்புறுதி – Cargo Insurance**

கடல் பயணத்தின் போது ஒரு துறைமுகத்தின் இருந்து இன்னொரு துறைமுகத்திற்கு பொருட்களை எடுத்துச்செல்லும் போது கப்பலில் ஏற்றப்பட்டு அழிவடைந்த பொருட்களிற்கு மாத்திரம் இழப்பீட்டைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் கப்பல் சரக்குக்காப்புறுதி ஒப்பந்தமாகும்.

இக்காப்புறுதி ஒப்பந்தத்தினை பின்வரும் தரப்பினர்கள் ஏற்படுத்த முடியும்.

01. ஏற்றுமதியாளர்
02. இறக்குமதியாளர்
03. காப்புறுதிக்கம்பனிகள்

**கப்பல் சரக்குக் காப்புறுதியின் வகைகள்**

- பெறுமதி குறித்த காப்புறுதி
- திறந்த காப்புறுதி ஒப்பந்தம்
- மிதக்கும் காப்புறுதி ஒப்பந்தம் / எதிர்காலப்பாதுகாப்பு ஒப்பந்தம்

**பெறுமதி குறித்த காப்புறுதி ஒப்பந்தம் - Valued policy**

பொருட்களைக் குறித்த கால எல்லையினுள் பகுதி பகுதியாக ஏற்றுமதி செய்யும் போது இறக்குமதி செய்கின்ற போது பொருட்களின் முழுமையான பெறுமதிக்கும் ஒரே தடவையில் பெற்றுக்கொள்ளக் கூடிய காப்புறுதி ஒப்பந்தமே பெறுமதி குறித்த காப்புறுதி ஒப்பந்தமாகும்.

எனினும் ஒவ்வொரு தடவையும் அனுப்பப்படும் பொருட்களின் பெறுமதி தனித்தனியே காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

**திறந்த காப்புறுதி ஒப்பந்தம் - Open Policy**

ஏற்றுமதி / இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபடும் வணிகர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் கப்பல் பணத்தை எதிர்பார்க்கும் பொருட்களின் தொகைக்கு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் திறந்த காப்புறுதி ஒப்பந்தமாகும்.

**மிதக்கும் காப்புறுதி ஒப்பந்தம் Flating Policy**

தொடர்ச்சியாக கப்பல் ஊடாக வியாபாரத்தில் ஈடுபடும் போது குறித்த காலத்துக்கென மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் மிதக்கும் காப்புறுதி ஒப்பந்தமாகும்.

இங்கு ஒவ்வொரு தடவையும் கப்பல் ஊடாக பொருட்களை அனுப்புகின்ற போது அவற்றின் பெறுமதியினை காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவிக்க வேண்டும்.

**ஒரு கப்பலிற்கு மிதக்கும் காப்புறுதி ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள்**

- காப்புறுதிக்கான கிரயங்கள் குறைவு
- ஒவ்வொரு தடவையும் காப்புறுதி செய்ய வேண்டும் என்ற தேவையில்லை
- நேரத்தை மீதப்படுத்த முடியும்
- இலகுவாகக் காப்புறுதியை ஏற்படுத்த முடியும்

**கடலபாயக் காப்புறுதியின் விசேட வகைகள்**

- காலம் குறித்த காப்புறுதி ஒப்பந்தம் - Time policy
- பயணம் குறித்த காப்புறுதி ஒப்பந்தம் - Voyage policy
- கலப்பு காப்புறுதி ஒப்பந்தம் - Mixed policy

**காலம் குறித்த காப்புறுதி**

கடல் பயணத்தின் போது பயணம் ஆரம்பிக்கும் திகதி, பயணம், முடிவடையும் திகதி என்பன குறிப்பிடப்பட்டு மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் காலம் குறித்த காப்புறுதி ஒப்பந்தமாகும்.

இங்கு குறிப்பிடப்பட்ட காலத்தை விட முந்திய திகதியிலோ / பிந்திய திகதியிலோ கப்பலிற்கு இழப்பு ஏற்படுகின்ற போது இழப்பீடு வழங்கப்பட மாட்டது

**பயணம் குறித்த காப்புறுதி – Voyage policy**

கடல் பயணத்தின் போது கப்பல் பயணிக்க இருக்கும் இடங்களை குறிப்பிட்டு மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தங்களே பயணம் குறித்த காப்புறுதி ஒப்பந்தமாகும்.

இக் காப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துறைமுகங்களின் ஊடாகவும் குறிப்பிடப்பட்டுள்ள கடல்பாதை வழியே பயணம் செய்யும் போது மட்டுமே இழப்பு ஏற்படுகின்ற போது இழப்பீடு வழங்கப்படும்.

**கலப்பு காப்புறுதி – Mixed Policy**

கடல் பயணத்தின் போது கப்பல் புறப்படும் திகதி கப்பல் வந்தமையும் திகதி கப்பல் செல்லவுள்ள துறைமுகங்கள் தொடர்பான விபரம் கடல்பாதை என்பன குறிப்பிடப்பட்டு மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் கலப்பு காப்புறுதி ஒப்பந்தமாகும்.

**பூரண மொத்த நட்டம் Total Loss**

கப்பல் முழுமையாக சேதமடைந்த அல்லது அதனைப்பயன்படுத்தாத முடியாத அளவிற்கு சேதமடைதல் போன்ற நட்டங்களை உள்ளடக்கிய காப்புறுதி ஒப்பந்தம் பூரண மொத்த நட்டமாகும்.

இதனைப் பின்வருமாறு 02 வகைப்படுத்தலாம்

- உண்மையான மொத்த நட்டம்
- பகுதியளவு நட்டம்

**உண்மையான மொத்த நட்டம்**

கப்பலோ / கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களோ முழுமையாக சேதமடைந்து இருப்பின் அது உண்மையான மொத்த நட்டமாகும்.

**பகுதியளவு நட்டம்**

காப்புறுதி செய்யப்பட்ட கப்பல் / சுமை சேதமடைந்திருக்கும் போது அதை மீளமைப்பதை கொண்டு / புனரமைத்துக்கொண்டு மீளவும் பயன்படுத்தக்கூடிய நிலை காணப்படுகின்ற வேளையில் அது பகுதியளவு நட்டமாகும்.

**கடல் அபாய காப்புறுதியை ஏற்படுத்தக் கூடிய உரிமையுடைய வர்கள்**

- கப்பல் கம்பனி
- கப்பல் உடமையாளர்
- கப்பல் சரக்கின் சொந்தக்காரர்கள்
- கப்பலைக் குத்தகைக்குப் பெற்றோர்
- கப்பல் தலைவர்கள் / மாலுமிகள்

**விசேட கடலாபாய நட்டங்கள்**

- பொதுச்சராசரி

- விசேட சராசரி
- வஞ்சகச்செயல்
- வெளியே எறிதல்
- இடைவிலகல்

**பொதுச்சராசரி – General Average Method**

விபத்துக்குள்ளான / பழுதடைந்த கப்பலை தரை சேர்ப்பதற்கு ஏற்பட்ட நட்டத்தை / கப்பல் கடலில் தாழ்ந்து போகும் அபாயம் ஏற்பட்டமையால் அதிலுள்ள பொருட்களை கடலினுள் வீசப்பட்டமையினால் ஏற்படும் நட்டத்தை சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களும் தமது உடமைகளின் பெறுமதியின் விகிதாசார அடிப்படையில் இழப்பீடு வழங்குகின்ற முறை பொதுச்சராசரி முறையாகும்.

Eg:- காப்புறுதி செய்யப்பட்ட கப்பல் ஒன்றின் பெறுமதி 2000000/= ஆகும். குறித்த கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களின் பெறுமதி 1000 000/= ஆகும். கப்பல் கேள்வி 200000/= ஆகவும் காணப்படுகின்றது. குறித்த கப்பலில் விபத்து ஏற்பட்டமையினால் கப்பலைக்காப்பாற்றும் நோக்கில் கடலில் தூக்கி வீசப்பட்ட பெறுமதி 500000/= ஆகும். இங்கு பொதுச்சராசரி அடிப்படையில் ஒவ்வொரு கட்சியினரும் பொறுப்பேற்க வேண்டிய நட்டஈட்டின் அளவு யாது?

கப்பல் - 200 0000 $\frac{200\ 000}{320\ 0000}$ x 500 000

சரக்கு - 100 0000 $\frac{1000\ 000}{320\ 0000}$ x 500 000

கப்பற்கேள்வி - $\frac{200\ 000}{320\ 0000}$ $\frac{200\ 000}{320\ 0000}$ x 500 000

**தனிப்பட்ட சராசரி / விசேட சராசரி**

கடல் பயணத்தின் போது நட்டம் தற்செயலாக ஏற்படுமாயின் அந்த நட்டத்தை அப்பொருளின் உடமையாளர் மட்டுமே பொறுப்பெடுத்தல் விசேட சராசரி முறையாகும்.

**வஞ்சகச்செயல்**

வேண்டுமென்றே ஒருவரை நட்டப்படுத்தும் நோக்கில் அவருடைய பொருட்களைக் கடலில் வீசுதல் வஞ்சகச்செயலாகும்.

**இடைவிலகிச்செல்லல் / பாதைமாறிச்செல்லுதல்**

கப்பல் பயணத்தின் போது கப்பலிற்கு அனுமதிக்கப்பட்ட பாதை வழியின்றி / கடல் பயணத்தின் போதான காப்புறுதியில் குறிப்பிட்ட பாதை வழி அன்றி மாற்றுப்பாதையூடாக கப்பல் பயணத்தை மேற்கொள்ளல் இடைவிலகிச் செல்லுவதாகும்.

**கப்பல் இடைவிலகிச் செல்வதற்கான காரணங்கள்**

- யுத்த காரணங்கள்
- கப்பலில் பழுது ஏற்படல்
- சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்கள்
- வேண்டுமென்றே இடைவிலகிச் செல்லல்
- தனிப்பட்ட காரணங்கள்

**கப்பல் இடைவிலகிச் செல்லும் போது இழப்பு ஏற்பட்டால் இழப்பீடு சந்தர்ப்பங்கள்**

- யுத்த காரணங்கள்
- சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்கள்
- கப்பலிற்கு ஏற்பட்ட அவசர திருத்த வேலை
- வேறு ஏதேனும் காரணங்களால் வழக்கமான பாதையில் இழப்பு வரும் எனக்கருதினால்

**கப்பல் இடைவிலகிச் செல்லும் போது இழப்பு ஏற்பட்டால் இழப்பீடு வழுங்கமுடியாத சந்தர்ப்பங்கள்**

- தனிப்பட்ட காரணங்களுக்காக இடைவிலகல்
- வேண்டுமென்றே இடைவிலகல் / தீய எண்ணம்
- தகுந்த / நியாயமான காரணங்கள் இன்றி இடைவிலகிச் செல்லல்

**களவு அபாயக்காப்புறுதி Thift Insurane**

வணிக நிலையங்களினால் / வீடுகளில் ஏற்படக்கூடிய களவு அபாய இடர்களை உள்வாங்கப்படுவதற்காக ஏற்படுத்தப்படும் காப்புறுதி ஒப்பந்தம் களவு அபாய காப்புறுதி ஆகும்.

## தீ அபாயக்காப்புறுதி – Fire Insurance

வீடு / வணிகக்கட்டிடங்களிற்கும் அதனுள் அடங்கிய பொருட்களிற்கும் மற்றும் சாதனங்களிற்கும் தீயினால் / தீ சார்ந்த விபத்துக்களினால் ஏற்படும் நட்டங்களை ஈடுசெய்ய மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் தீ அபாயக்காப்புறுதி ஒப்பந்தமாகும்.

**தீ அபாயக் காப்புறுதி செய்வதனால் ஏற்படும் நன்மைகள்**

- தீ விபத்தினால் வணிகர்களுக்கு ஏற்படும் நட்டங்களை ஈடுசெய்தல்
- தீ விபத்தினால் வணிகங்கள் தடைப்படுவதற்கு ஏற்படும் இழப்புகளிற்கு இழப்பீட்டை வழங்குதல்
- மீண்டும் வணிகத்தை ஆரம்பிக்க உதவுதல்

**தீக்காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றில் மேலதிகக் கட்டணங்களை செலுத்துவதன் மூலம் பாதுகாப்பை பெற்றுக் கொள்ளக்கூடிய அபாயங்கள்**

- மின்னல் தாக்கம்
- மின்சாரம் தொடர்பான நட்டங்கள்
- கலவரம்
- வெடிப்பு
- வேலை நிறுத்தம்
- விமான விபத்து
- புயல்காற்று
- வெள்ளப்பெருக்கு
- நிலநடுக்கம்

**தீக்காப்புறுதி ஒப்பந்தத்தில் இழப்பீடு வழங்கக்கூடிய நியதிகள்**

- சராசரி வாசம் சேர்ந்த காப்புறுதி ஒப்பந்தம்
- சராசரி வாசகம் நீங்கலான காப்புறுதி ஒப்பந்தம்

**தீக்காப்புறுதி ஒப்பந்தத்தின் வகைகள்**

- சராசரிவாசகம் கொண்டுள்ள காப்புறுதி ஒப்பந்தம்
- சராசரி வாசகம் கொண்டிருக்காத காப்புறுதி ஒப்பந்தம்
- பெறுமானம் குறித்த காப்புறுதி ஒப்பந்தம்
- பெறுமானம் குறிக்காத காப்புறுதி ஒப்பந்தம்
- மிதக்கும் காப்புறுதி ஒப்பந்தம்

**சராசரி வாசகம் கொண்டுள்ள காப்புறுதி ஒப்பந்தம்**

காப்புறுதி செய்யப்பட்ட சொத்து ஒன்றின் சந்தை பெறுமதிக்கும் காப்புறுத்தப்பட்ட தொகைக்கும் இடையிலான விகிதாசார அடிப்படையில் காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு தீயினால் நட்டம் ஏற்படுகின்ற போது இழப்பீடு வழங்கப்படுகின்ற காப்புறுதி ஒப்பந்தம் சராசரி வாசகம் சேர்ந்த காப்புறுதி ஒப்பந்தமாகும்

Eg:- 500000 பெறுமதி கொண்ட பொருட்களுக்கு 300000/= காப்புறுதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பொருட்கள் தீயினால் சேதமடைந்து மதிப்பிடப்பட்ட நட்டம் 100000/= ஆயின் இழப்பீடு யாது?

$$\frac{\text{காப்புறுத்தப்பட்ட தொகை}}{\text{சொத்தின் பெறுமதி}} \times \text{மதிப்பிடப்பட்ட நட்டம்}$$

$$\frac{300\ 000}{500\ 000} \times 100\ 000$$

$= 60\ 000$ ரூபா

**சராசரி வாசகம் நீங்கலான காப்புறுதி**

தீ அபாய காப்புறுதி செய்யப்பட்ட சொத்தொன்றுக்கு பகுதியளவில் நட்டம் ஏற்படுகின்ற போது மதிப்பிடப்பட்ட நட்டம் முழுவதும் இழப்பீடாக வழங்கப்படும் காப்புறுதி ஒப்பந்தம் சராசரி வாசகம் நீங்கலான காப்புறுதி ஆகும்.

Eg:- 500 000/= பெறுமதி கொண்ட பொருட்களுக்கு 300 000/= தீக்காப்புறுதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த சொத்து தீயினால் நட்டம் அடையும் போது மதிப்பிடப்பட்ட நட்டம் 100000 எனின் இழப்பீடு யாது?

100 000/=

**பெறுமானம் குறித்த தீக்காப்புறுதி ஒப்பந்தம்**

தீ அபாய காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளும் போது இழப்பீடாக வழங்க வேண்டிய தொகையை குறிப்பிட்டு மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் பெறுமானம் குறித்த தீக்காப்புறுதி ஒப்பந்தமாகும்.

Eg:-:- பெரும்பாலும் இவ்வகையான ஒப்பந்தமானது அருங்கலை / வரலாற்று கிரயமான ஒப்பந்தமாகும்

**பெறுமானம் குறிக்காத காப்புறுதி ஒப்பந்தம்**

தீக்காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளும் போது இழப்பீடாக வழங்க வேண்டிய தொகை குறிக்கப்படாது மேற்கொள்ளும் ஒப்பந்தமாகும்.

**மிதக்கும் தீக்காப்புறுதி ஒப்பந்தம்**

பல சொத்துக்களின் உடமையாளர் ஒன்று சேர்த்து தனது சொத்துக்கள் அனைத்துக்கும் ஒரே காப்புறுதி ஒப்பந்தத்தில் தீக்காப்புறுதி ஏற்படுத்தல் இதுவாகும்.

**மோட்டார் வாகனக்காப்புறுதி Motor Vechile insuranee**

மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துகின்ற பொழுது விபத்துக்கள் ஏற்படின் மோட்டார் வாகன உடமையாளர்கள் மோட்டார் வாகனத்தின் சாரதி மோட்டார் வாகனத்தில் பயணம் செய்த பயணிகள் 3ம் நபர்கள் அவர்களின் உடமைகள் என்பவற்றிற்கு இழப்புக்கள் நேர்கின்ற பொழுது இழப்பீட்டை வழங்குவதாக உறுதியளித்து மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் மோட்டார் வாகனக்காப்புறுதியாகும்.

**மோட்டார் வாகனக்காப்புறுதியின் வகைகள்**

- பூரணக்காப்புறுதி / முழுமையான காப்புறுதி / அகழ்விரிவான காப்புறுதி
- 3ம் நபர் காப்புறுதி / படர்க்கை காப்புறுதி

- 3ம் நபர், தீ மற்றும் களப்பாயக்காப்புறுதி

**முழுமையான காப்புறுதி / அகழ்விரிவான காப்புறுதி / பூரண காப்புறுதி**

மோட்டார் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் போது அதனால் நட்டம் அடையக்கூடிய மோட்டார் வாகன உடமையாளர், சாரதி, பயணிகள் 3ம் நபர்களிற்கு ஏற்படக்கூடிய இழப்புக்களிற்கு இழப்பீட்டை வழங்கக்கூடிய காப்புறுதி ஒப்பந்தம் முழுமையான காப்புறுதியாகும்.

**3ம் நபர் காப்புறுதி / படர்க்கை காப்புறுதி**

மோட்டார் வாகனங்களை வீதிகளில் பயன்படுத்தும் போது விபத்துக்கள் ஏற்படுமாயின் அவ் விபத்தினால் பாதிப்படையும் வீதியைப் பயன்படுத்தும் ஏனைய 3ம் தரப்பினருக்கு இழப்பீட்டை வழங்கக்கூடிய காப்புறுதி ஒப்பந்தம் 3ம் நபர் காப்புறுதியாகும்.

இங்கு மோட்டார் வாகன உடமையாளருக்கோ / பயணிகளிற்கோ / சாரதிக்கோ இழப்புக்கள் ஏற்படின் இழப்பீடு வழங்கப்படமாட்டாது.

1951ஆம் ஆண்டின் 14 இல மோட்டார் போக்குவரத்துச்சட்டத்திற்கு அமைக்க ஓர் வாகனம் சாரதி ஆகக்குறைந்தது நபர் காப்புறுதியேனும் இல்லாமல் ஓர் வாகன வீதியில் செலுத்த முடியாது.

**3ம் நபர் தீ மற்றும் களப்பாயக்காப்புறுதி**

மோட்டார் வாகனங்களிற்கு கலவரத்தாலோ / வேறு ஏதேனும் காரணங்களினாலோ தீ விபத்து ஏற்படும் போது / மோட்டார் வாகனத்தை களவாடுகின்ற போது / மோட்டார் வாகனம் விபத்துக்குள்ளாகும் வேளையில் 3ம் நபர்களிற்கு ஏற்படும் நட்டங்களிற்கு இழப்பீட்டை வழங்குவதாக மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் இதுவாகும்.

**மோட்டார் வாகனக்காப்புறுதியில் தவணைக்கட்டணத்தைத் தீர்மானிக்கும் காரணிகள்**

- வாகனத்தின் பெறுமதி
- காப்புறுதி வகை
- முதற்பதிவு திகதி / வாகனத்தின் வயது
- வாகனத்தை பயன்படுத்தும் நோக்கம்

- பாதுகாப்பை பெற இருக்கும் அபாயங்களின் தன்மை

**கோரப்படாத மிகை ஊதியம் - No Claim Bonus**

முழுமையாகக் காப்புறுதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றிற்கு குறித்த காப்புறுதிக்காலத்தினுள் எத்தகைய இழப்புக்களும் ஏற்படாத வேளையிலோ / சிறு நட்டங்கள் ஏற்பட்டு இழப்பீட்டுக் கோரிக்கையை முன்வைக்காத வேளையிலோ அடுத்த காலப்பகுதிக்கான காப்புறுதிக் கட்டணத்தை செலுத்தும் போது காப்புறுதி நிறுவனத்தில் வழங்கப்படும் கட்டணச்சலுகை கோரப்படாத மிகை ஊதியமாகும்.

**பல்துறை விபத்து காப்புறுதி**

எதிர்பாராத விதமாகவோ / தற்செயலாகவோ நபர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு எதிராக இழப்பீட்டை பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் காப்புறுதி பல்துறை விபத்து காப்புறுதி ஆகும். இதனுள் பின்வரும் நடைமுறைகள் காணப்படுகின்றது.

- தனிநபர் சடுதி விபத்து காப்புறுதி
- மோட்டார் வாகன காப்புறுதி
- களவு அபாய காப்புறுதி
- வழப்பறி காப்புறுதி
- பொறுப்பு காப்புறுதி

**தனிநபர் சடுதி விபத்து காப்புறுதி**

தனிநபர்கள் தமது வழக்கமான தொழில்களாகும் ஈடுபடாதவாறு ஏற்படக்கூடிய நட்டங்கள் / தீங்குகளுக்கு எதிராக இழப்பீட்டை பெறுவதற்காக ஏற்படுத்தும் காப்புறுதி ஒப்பந்தம் இதுவாகும்.

**களபாயக்காப்புறுதி**

வணிக நிறுவனங்கள் மற்றும் தனியார் வீடுகள் என்பவற்றில் சொத்துக்கள் களவாடப்படுவதால் ஏற்படும் நட்டங்களிற்கு இழப்பீட்டைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தமாகும்.

களப்பாயக்காப்புறுதியில் கட்டணங்களை செலுத்துவதனூடாக பின்வரும் இடர்களிற்கும் பாதுகாப்பை பெறமுடியும்.

- வேலை நிறுத்தம்
- கலவரம்
- உள்நாட்டு யுத்தங்கள்

**வழிப்பொருள் காப்புறுதி**

பயணங்களின் போது பயணச்சரக்குகள் விபத்துக்களினாலோ சேதப்படுத்தப்பட்டு களவு போகின்ற பொழுது ஏற்படுகின்ற நட்டங்களிற்கு இழப்பு ஏற்படுகின்ற வேளையில் இழப்பீட்டைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற காப்புறுதி ஒப்பந்தம் இதுவாகும்.

**இயற்கை அனர்த்த காப்புறுதி**

வெள்ளம், வறட்சி போன்றவற்றால் சொத்துக்களுக்கு ஏற்படக்கூடிய சேதங்களுக்கு இழப்பீட்டை பெறுவதற்காக ஏற்படுத்தப்படும் காப்புறுதி ஒப்பந்தம் இதுவாகும்

**பொறுப்புக்காப்புறுதி lability Insurance**

ஆதனங்கள் மற்றும் வணிகமுயற்சிகளால் வெளிநபருக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களில் இருந்து அவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் குறித்த சொத்தின் வணிகத்தின் உடமையாளரால் மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் பொறுப்புக்காப்புறுதி ஆகும்.
இதனுள் பின்வரும் வகைகள் காணப்படுகின்றனது

- உற்பத்திப்பொருள் பொறுப்புக்காப்புறுதி
- தொழிலாளர் நட்டஈட்டுக்காப்புறுதி
- உயர்தொழில் பொறுப்புக்காப்புறுதி
- பொதுமக்கள் பொறுப்பு காப்புறுதி
- ஊழியர் நம்பிக்கை பொறுப்பு காப்புறுதி
- 03ம் நபர் பொறுப்பு காப்புறுதி

**உற்பத்திப்பொருள் பொறுப்பு காப்புறுதி**

**Product lability Insurance**

பல்வேறு வகையான உணவு பான வகைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களால் நுகர்வோருக்கு / பாவனையாளருக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களில் இருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் உற்பத்திப்பொருள் பொறுப்பு காப்புறுதி ஆகும்.

**ஊழியர் நட்டஈட்டுக்காப்புறுதி**

ஊழியர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் போது தொழில்ரீதியாக ஏற்படும் விபத்துக்களால் ஏற்படக்கூடிய நட்டங்கள் சுகயீனங்கள் என்பவற்றிற்கு எதிராக இழப்பீட்டை பெறும் நோக்கில் தொழில்சாலை உடமையாளர்களால் மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஊழியர் நட்டஈட்டுக்காப்புறுதியாகும்.

**உயர்தொழில் பொறுப்புகாப்புறுதி**

உயர்தொழில் சேவைகளை ஆற்றுவோர் அவர்களது சேவையால் எதிர்பாராத விதமாக ஏற்படக்கூடிய இழப்புகளுக்கு எதிராக இழப்பீட்டைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் காப்புறுதி உயர்தொழில் பொறுப்புக்காப்புறுதியாகும்.

**பொதுமக்கள் பொறுப்பு காப்புறுதி**

குறிப்பிட்ட ஒரு விடயம் காரணமாக / வணிக நடவடிக்கை காரணமாக பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களை ஈடுசெய்வதற்காக மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் இதுவாகும்.

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு காப்புறுதி**

ஊழியர்களின் மோசடி, களவு போன்றவற்றால் தொழில் தருனருக்கு ஏற்படக்கூடிய பெருந்தொகையான நட்டங்களில் இருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ள ஊழியர் நம்பிக்கை பொறுப்பு காப்புறுதியாகும்.

**ஆயுள் காப்புறுதிக்கும் பொதுக்காப்புறுதிக்கும் இடையிலான வேறுபாடுகள்**

| ஆயுள் காப்புறுதி | பொதுக்காப்புறுதி |
|---|---|
| • ஆயுளிற்கு ஏற்படுத்தப்படும் | • சொத்துக்கள் மீது ஏற்படுத்தப் படும் |

| | |
|---|---|
| | |
| • இழப்பீட்டு தத்துவம் பொருந்தாது | • இழப்பீட்டு தத்துவம் பொருந்தும் |
| • ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டவர் ஒப்பந்தகாலம் முடியும் வரை உயிருடன் இருப்பின் ஒப்பந்ததொகை வழங்கப்படும் | • அவ்வாறு வழங்கப்படமாட்டாது |
| • இது ஒரு கட்டாய சேமிப்பு ஆகும் | • அவ்வாறு இல்லை |
| • பங்கு இலாபம் வழங்கப்படும் | • பங்குலாபம் வழங்கப்படமாட்டாது |
| • கடன்பெறுமானம் உண்டு | • அவ்வாறு வசதி இல்லை |
| • ஓப்படைப்பு பெறுமானத்தை பெறமுடியும் | • அவ்வாறில்லை |
| | |

**இலங்கையின் காப்புறுதி சந்தை**

காப்புறுதி சேவையை வழங்கும் போது காப்புறுதி சேவையை பெறுவோரும் காப்புறுதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஒன்று சேர்தல் காப்புறுதி சந்தையாகும்.

**காப்புறுதி சந்தையில் காணப்படுவோர்**

- காப்புறுதி பாதுகாப்பை பெறுவோர் / காப்புறுதி செய்வோர்
- காப்புறுதி அழிப்பவர் / காப்புறுதி விற்பனையாளர்
- காப்புறுதி நடுவர்கள்
- காப்புறுதி பாதுகாப்பை பெறுவோர் / காப்புறுதி செய்வோர் / கொள்வனவாளர்
- பொதுமக்கள், வணிகநிறுவனங்கள், பிரத்தியோக தொழிலில் ஈடுபடுவோர், அரசு

**காப்புறுதி அழிப்போர் / காப்புறுதி நிறுவனங்கள் / காப்புறுதி விற்பனையாளர்கள்**

- அரசாங்கத்துக்கு சொந்தமானது

Eg:- * வரையறுத்த இலங்கை காப்புறுதி
* ஏற்றுமதி கடன் காப்புறுதிக்கூட்டுத்தாபனம்
* விவசாய கமத்தொழில் காப்புறுதிச்சேவை

**தனியார் துறைக்கு சொந்தமானது**

Eg:- * Janasakthi
* Union Assurance
* NDB
* Celinco
* HNB Assurance

Note :- காப்புறுதி நிறுவனங்கள் தற்காலத்தில் ஆயுள் காப்புறுதியையும் பொதுக்காப்புறுதியையும் ஒரே நிறுவனமாக கொண்டு மேற்கொள்ள முடியாது. இதனால் குறித்த நிறுவனங்கள் இரண்டாக பிரிக்கப்பட்டு தமது தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது.

Eg:- Celino Life
Celinco General
janasakithi Life
janasakithi General

**காப்புறுதி நடுவர்கள்**

காப்புறுதி நடுவர் பின்வருமாறு வகைப்படுத்தப்படுவார்

1. காப்புறுதி முகவர்

2. காப்புறுதி தரகர்

**காப்புறுதி முகவர்**

காப்புறுதி திட்டங்களை வாடிக்கையாளருக்கு விற்பனை செய்வதற்காக காப்புறுதி நிறுவனத்தால் / காப்புறுதி தரகரால் நியமிக்கப்படும் பிரதிநிதி காப்புறுதி முகவர் ஆவார் இவர் முகவராக நியமிக்கப்பட்ட எழுத்து மூலமான ஒப்பந்தத்தின் கீழ் தொழிற்படுவர்.

**காப்புறுதி தரகர்**

தரவுக்கட்டணம் / தரவு மூலம் வருமானம் உழைப்பதற்காக காப்புறுதி செய்பவர் சார்பில் செயற்படுவதற்கு காப்புறுதி நிறுவனத்திடம் வியாபாரத்தை முன்வைப்பதற்கு / மீள் காப்புறுதி ஏற்படுத்துவதற்கு இடைநிலையாளர்களாக தொழிற்படுவதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் காப்புறுதி தரகர் ஆவார்.

**காப்புறுதி தரகருக்கும் காப்புறுதி முகவருக்கும் இடையிலான வேறுபாடுகள்**

| காப்புறுதி தரகர் | காப்புறுதி முகவர் |
|---|---|
| • இவர் காப்புறுதி சபையினால் பதிவு செய்யப்படவேண்டும் | • அவ்வாறு தேவையில்லை |
| • இத்தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை வைத்திருப்பார் | • காப்புறுதி நிறுவனத்தால் / தரகரால் நியமிக்கப்படுவார் |
| • நிறுவன அமைப்பாக காணப்படும் | • தனிநபராக காணப்படுவார் |

**காப்புறுதி முகவராக வருவதற்கான தகைமைகள்**

- 18 வயதை தாண்டியவராக செய்தவராக இருக்க வேண்டும்
- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
- க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் ஆறு பாடங்களேனும் சித்திபெற்றவராக இருத்தல் வேண்டும்
- காப்புறுதிக்கட்டுப்பாட்டுச் சபையால் நடாத்தப்படும் ஆட்சேர்ப்பு பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்
- நீதி மன்றத்தில் குற்றவாளியாக கருதப்பட்டு இருக்க கூடாது
- காப்புறுதி கம்பனியில் / தரகரிடம் நிரந்தர சம்பளம் பெறும் ஊழியராக இருக்க கூடாது

Note :- தனியார் துறையும் காப்புறுதி தொழிலில் ஈடுபட அனுமதித்த சட்டம்

1986 / 42 இலக்க கா/தி கட்டுப்பாட்டு (திருத்த) பட்டம்

**காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**

காப்புறுதித்தொழிலை அபிவிருத்தி செய்யவும் ஒழுங்குபடுத்துவதற்கும் என 2017 ஆம் ஆண்டு 23ம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் 19.10.2017 அன்று நிறுவப்பட்ட அமைப்பு காப்புறுதி சபையாகும்.

**காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள்**

- காப்புறுதி தொழிலில் ஈடுபடும் நிறுவனங்களை பதிவு செய்தல்
- காப்புறுதி தரகு தொழிலில் ஈடுபடும் நிறுவனங்களை பதிவு செய்தல்
- காப்புறுதி நிறுவனங்களின் பதிவினை இரத்து செய்தல்
- காப்புறுதி தொழிலை ஒழுங்கபடுத்துவதற்கும் விருத்தி செய்வதற்கும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்
- காப்புறுதி தொழில் தொடர்பாக அரசகொள்கைகளை நடைமுறைப்படுத்தல்
- காப்புறுதி தொடர்பாக அரசின் சார்பில் Cess வரியை அமுல்படுத்தல்
- காப்புறுதிக்கம்பனிகளில் நிதியறிக்கையை பயன்படுத்தல்

**காப்புறுதி தொழிலை பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

- ✓ விண்ணப்பப்படிவம்
- ✓ அமைப்பு அகவிதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
- ✓ கூட்டிணைப்பு சான்றிதழினை உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
- ✓ கம்பனியின் பங்குதாரர் மற்றும் பணிப்பாளர் தொடர்பான விபரம்
- ✓ மேற்கொள்ளவிருக்கும் காப்புறுதி வகை
- ✓ தேவையான பதிவுக்கட்டணம்

## CESS வரி

காப்புறுதி தொழிலில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் 2000ஆம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதிச்சட்டத்தின் 7(2) பிரிவுக்கு அமைவாக 2002ம்ஆண்டு யூலை 9ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தகமானியின் அறிவித்தலின் பிரகாரம் அரசாங்கத்துக்கு செலுத்தும் வரி இதுவாகும்.

**விவசாய கமநலத்தொழில் காப்புறுதிச்சபை**

1999ம் ஆண்டின் 20ம் இலக்க விவசாய கமநல காப்புறுதிச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அமைப்பே இதுவாகும். இது விவசாய காப்புறுதிச்சபைக்கு பதிலாக உருவாக்கப்பட்டது.

**விவசாய கமநலதொழில் காப்புறுதிச்சபையின் தொழிற்பாடுகள்**

- ✓ பயிர்களுக்கு விவசாய காப்புறுதி செய்தல்
- ✓ விவசாய, தோட்ட, வேளாண்மை, மருந்து மூலிகைகளுக்கு காப்புறுதி செய்தல்
- ✓ கால்நடை வளர்ப்புக்கு காப்புறுதி செய்தல்
- ✓ மீன்பிடி தொழிலுக்கு காப்புறுதி செய்தல்
- ✓ விவசாய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தும் போது காப்புறுதி செய்தல்

**விவசாய காப்புறுதி – Agriculuture Insurance**

விவசாய பயிர்களுக்கு வறட்சி நீர்ப்பற்றாக்குறை வெள்ளப்பெருக்கு மிருகங்களால் அழிவடைதல் பூச்சித்தாக்கங்கள் மற்றும் நோய்களால் ஏற்படும் இழப்புகளுக்கு எதிராக வழங்கும் காப்புறுதி ஒப்பந்தம் விவசாய காப்புறுதியாகும்.

**ஏற்றுமதிக்கடன் காப்புறுதி**

ஏற்றுமதியாளன் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்குரிய பணத்தை உரிய தவணையில் செலுத்த தவறாமையினால் இழப்பீட்டை றெும் நோக்கில் மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் காப்புறுதி இதுவாகும். இது 1978ஆம் ஆண்டில் இருந்து இலங்கை ஏற்றுமதிக் கடன் கூட்டுத்தாபனத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

**காப்புறுதி துறையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்**

- ✓ காப்புறுதி தொழிலை விருத்தி செய்வதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது
- ✓ காப்புறுதி கம்பனிகளில் வெளிநாட்டவரும் முதலிடுவதற்கான அனுமதி வழங்க்ப்பட்டமை
- ✓ புதிய காப்புறுதி நிறுவனங்கள் அமைக்கப்பட்டமை
- ✓ ஒரே காப்புறுதி நிறுவனம் ஆயுள் கா/தினையும் பொதுக்கா/தினையும் மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டமை
- ✓ விவசாய கமநல காப்புறுதி சபை உருவாக்கப்பட்டமை
- ✓ புதிய வகையான காப்புறுதி திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை
- ✓ காப்புறுதி தொடர்பாக Cess வரி அறிமுகப்படுத்தப்பட்டமை
- ✓ காப்புறுதி நிறுவனங்கள் கிளைகளை அதிகரித்தமை

**சுரக்ஷா காப்புறுதித் திட்டம்**

- பாடசாலை மாணவர்களுக்கு கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்படும் இலவச மருந்து , திடீர் விபத்துக் காப்புறுதி
- சகல பாடசாலைப் பிள்ளைகளுக்கும் இலவசக் காப்புறுதி
- "என்றும் காப்போம் தேசத்தின் பிள்ளைகளை" என்பது இதன் நோக்கம்
- வைத்தியசாலை , மருத்துவ சிகிச்சை இலவசம்
- கல்வி அமைச்சின் முயற்சியால் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவ கட்டணங்களில் 20% மற்றும் வைத்தியருக்கான கட்டணங்களில் 20% விலைகழிவு
- இலங்கை முழுவதும் *4.5* மில்லியன் மாணவர்களுக்கு இலவசக் காப்புறுதி
- காப்புறுதியை மேற்கொள்வதற்கு எந்த ஆவணமும் தேவையில்லை இழப்பீட்டைப் பெறும் போது பாடசாலையில் இருந்து அதற்கான விண்ணப்பப் படிவத்தினைபெற்று பூரணப்படுத்தல் போதுமானது
- இரண்டு இலச்சம் பெறுமதியான வைத்தியசாலை / மருத்துவ சிகிச்சை இலவசம்
- திடீர் விபத்துக்கான இழப்பீடு 100 000/=
- தாய் , தந்தையரின் திடீர் மரணத்தின் போது இழப்பீடு 75 000/=
- நிரந்தர அங்கவீனம் ஏற்படின் 100 000/= இழப்பீடு .
- புற்றுநோய் , சிறுநீரக செயலிழப்பு , பார்வை இழப்பு , தீக்காயம் போன்றவற்றிற்கும் இழப்பீடு.
- இக்காப்புறுதியை கல்வி அமைச்சு வரையறுத்த இலங்கைக் காப்புறுதி ஊடக மேற்கொள்ளுவிக்கின்றது.

## கடந்தகால வினாக்கள்

1. காப்புறுதித் தத்துவங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன

A - இழப்பீடு B – பதிலாள் வைப்பு C – பங்களிப்பு

D – மிக்குயர் நன்நம்பிக்கை

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் ஆயட்காப்புறுதிக்குப் பொருந்தக்கூடிய தத்துவத்தை தெரிவு செய்க (2015 / 15)

1. A 2. B 3. C 4. D 5.

(....... )

2. காப்புறுதி செய்யத்தக்க இடர்கள் மற்றும் காப்புறுதி செய்யத்தகாத இடர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன

A – மோட்டார் வாகனங்களின் தேய்வு B – ஒரு பாடகரின் குரல்

C - இறப்பு D – வயதாதல்

E – ஊழியர் விலகிச்செல்லல்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் காப்புறுதி செய்யத்தகாத இடர்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க

1. A,B,C,D 2. A,B,C,E 3 A,B,D,E 4. A,C,D,E 5. B,C,D,E

(....... )

3. குமரன் தனது காரை ரூபா 3 மில்லியனுக்கு காப்புறுதி செய்துள்ளார். அவரது கார் அடையாளம் தெரியாத நபரொருவரால் திருடப்பட்டது. காப்புறுதி நிறுவனம் ரூபா 3 மில்லியனை குமரனுக்கு நட்டஈடாக செலுத்தியது. சில நாட்களின் பின்னர் காப் புறுதி நிறுவனத்தால் கார் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அது ரூபா 3.5 மில்லியன் சந்தை பெறுமதிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. (ஏல விற்பனைக்கட்டணம் ரூபா 150,000) அதன் பின்னர் காப்புறுதி நிறுவனம் செய்ய வேண்டியது

(2014 / 12)

1. ரூபா 3 மில்லியன் வைத்துக்கொண்டு மிகுதி தொகையை குமரனுக்கு வழங்குதல்

2. ரூபா 3 மில்லியனையும் பிற செலவுகளையும் வைத்துக்கொண்டு மிகுதி தொகையை குமரனுக்கு வழங்குதல்

3. ஏல விற்பனைக் கட்டணத்தை செலுத்திய பின்னரான மிகுதி தொகையை வைத்துக்கொள்ளல்

4. மோட்டார் வாகனத்தை கொள்வனவு செய்பவருக்கு மிகுதி தொகையை வழங்கல்

5. மிகுதி தொகையை அரசுக்கு செலுத்துதல் (....... )

4. சிவா என்பவர் தான் வசிக்கும் வீட்டிற்காக ரூபா 200,000இற்கு X கம்பனியிடமிருந்து காப்புறுதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்டதுடன் ரூபா 400,000இற்கு Y கம்பனியிடமிருந்து மற்றுமோர் காப்புறுதிப்பத்திரத்தையும் பெற்றுள்ளார். வீடு தீயினால் சேதமடைந்ததன் காரணமாக ஏற்பட்ட இழப்பு ரூபா 300,000 ஆகக் காணப்பட்டது பங்களிப்புத் தத்துவத்தின் பிரகாரம் முறையே X மற்றும் Y கம்பனிகளால் செலுத்தப்படும் இழப்பீடுகள் யாவை? (2013 / 12)

1. X ரூபா, 200,000 ,Y ரூபா 400,000 2. X ரூபா, 150,000 ,Y ரூபா 150,000

3. X ரூபா, 200,000 ,Y ரூபா 100,000 4. X ரூபா, 100,000 ,Y ரூபா 200,000

5. X ரூபா, 200,000 ,Y ரூபா 300,000 (....... )

5. பின்வருவனவற்றுள் காப்புறுதியுடன் தொடர்புபட்ட வகையில் ஒரு கூற்று தவறானதாகும். தவறான கூற்றைத் தெரிவு செய்க (2012 / 12)

1. நபரொருவர் தனது உயிரின் மீது வரையறுக்கப்படாத காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டுள்ளார்.

2. நபரொருவர் தனது வாழ்க்கைத்துணையின் (Spouse) உயிரின் மீது காப்புறுதி செய்த நலனைக் கொண்டிருக்கவில்லை

3. தங்க நகைகளை அடகு பிடிப்பவர் (Pawn Broker) தன்னிடம் பிடிக்கப்பட்ட தங்க நகை காப்புறுதி செய்ததகு நலனைக் கொண்டுள்ளார்.

4.நபரொருவர் தனது பிள்ளைகளின் அல்லது உறவினர்களின் உயிரின் மீது காப்புறுதி செய்தகுநலனைக் கொண்டிருக்கவில்லை

5. ஆயுளுறுதி மற்றும் தனிப்பட்ட விபத்துக்கள் தொடர்பான காப்புறுதிக்கு இழப்பீட்டு (நட்டஈட்டு) தத்துவம் பொருத்தமானதல்ல (....... )

6. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க

1. ஒரு தந்தையானவர் தனது மகனின் ஆயுள் மீது காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டிருக்கவில்லை

2. தனிநபர் விபத்துக்காப்புறுதி மற்றும் ஆயுட்காப்புறுதி ஆகியவை தொடர்பில் பதிலால் வைப்பு பங்களிப்பு மற்றும் அண்மைக்காரணி போன்ற காப்புறுதித் தத்துவங்களைப் பிரயோகிக்க முடியாது

3. குறித்த ஒரு ஆதனம் தொடர்பில் இரட்டைக்காப்புறுதியை பெற்றுக்கொள்ள முடியுமாயினும் ஆதுனத்தின் பெறுமதிக்கும், கூடுதலான நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதனைக் தடுக்கும் தத்துவம் பதிலாள் வைப்பாகும்

4. கடன் கொடுத்தோன் ஒருவன் தனது கடன்பட்டோனின் ஆயுளின் மீது காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டுள்ளார்

5. மிகவும் உயர்ந்த பெறுமதியுடைய ஆதனமொன்றின் இடரைப் பல காப்புறுதிக் கம்பனிகள் ஏற்றுக்கொள்வது மீள்காப்புறுதி என அழைக்கப்படும் (....... )

7. சதீஸ் என்பவர் ரூ 1,000,000 பெறுமதியில் தனது மோட்டார் வாகனத்துக்கு அகல் விரிவான காப்புறுதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுள்ளார். அம் மோட்டார் வாகனத்தின் சந்தைப்பெறுமதி ரூ 2,000,000 ஆகும். மோட்டார் வாகனமானது விபத்தைச் சந்தித்த போது அதற்கு ஏற்பட்ட சேதம் ரூபா 400,000 ஆக மதிப்பிடப்பட்டது. காப்புறுதிக் கம்பனியால் சதீஸ் என்பவருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை எவ்வளவு? (2010 / B – I / 13)

1. ரூ 2,000,000 2. ரூ 1,000,000 3. ரூ 400,000

4. ரூ 200,000 5. எது வித இழப்பீட்டுக்கும் உரிமை இல்லை (....... )

8. குறித்தவொரு ஆதனத்துக்கு இரட்டைக் காப்புறுதியைச் செய்துள்ள போதும் இவ்வாதனத்தின் பெறுமதிக்கும் மேலாக நட்ட ஈட்டைப்

பெறுவதனைத் தடுக்கின்ற காப்புறுதித் தத்துவம்

(2009 / B – I/ 13)

1. மிக்குயர் நன்நம்பிக்கை
2. காப்புறுதி செய்தகுநலன்
3. பங்களிப்பு
4. பதிலாள் வைப்பு
5. அண்மைக்காரணி (....... )

9. காப்புறுதி செய்வோரால் காப்புறுதி அளிப்போருக்குச் சகல பொருத்தமான தகவல்களையும் வெளிப்படுத்த வேண்டுமென்பதைத் குறிப்பிடும் காப்புறுதித்தத்துவம் (2008 / B – I / 13)

1. காப்புறுதி செய்தகு நலன் (Insurable interest)
2. மிக்குயர் நம்பிக்கை (Utmost Good paith)
3. இழப்பீடு (indemnity)
4. பங்களிப்பு (Contribution)
5. பதிலாள் வைப்பு (Subrogation) (.......)

10. காப்புறுதி செய்பவர் வெளிக்கட்சியினரிடமிருந்து இழப்பீட்டைப் பெறும் தனது உரிமையைக் காப்புறுத்துவோருக்குத்துவோருக்கு மாற்ற வேண்டும் எனும் தத்துவம் எது? (2007 / B – 1 / 12)

1. காப்புறுத்தும் உரிமை
2. உயர் நன்னம்பிக்கைத் தத்துவம்
3. அங்கத்துவ தத்துவம்
4. பதிலாள் வைப்புத் தத்துவம்
5. அண்மைக்காரணி தத்துவம் (.......)

11. அதியுயர் பெறுமானங்கொண்ட சொத்தொன்றிற்கான நட்டத்தினைக் காப்புறுதிக் கம்பனிகள் பல ஏற்றுக்கொள்ளுதல் எவ்வாறு அழைக்கப்படும்? (2007 / B – 1 / 15)

1. உறுதிப்பொறுப்பேற்றல்
2. மறுகாப்புறுதி
3. இரட்டைக்காப்புறுதி
4. மிகை காப்புறுதி
5. குறைக்காப்புறுதி (.......)

12. மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய சில இடர்கள் கீழே தரப்பட்டுள்ளது

A – தேய்வு B –விபத்துக்கள் C – களவு

D – சந்தைப்பெறுமதி வீழ்ச்சி E – விற்பனை மூலமாக உருவாகும் நட்டம்

F– மூன்றாம் தரப்பினர் இழப்பீடு

மேலே கூறப்பட்டவற்றில் மோட்டார் வாகன காப்புறுதியின் கீழ் காப்புறுதி செய்யக்கூடிய இடங்களை மட்டும் கொண்ட தொகுதி எது?

1. ABC 2. ACD 3. AEF

4. BCD 5. BCF (…….)

13. பின்வருவனவற்றில் காப்புறுதியுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவு செய்க

1. எந்தவொரு இடரும் காப்புறுதி செய்யக்கூடியதாகும்
2. வாடகைக்காரருக்கு தாம் வசிக்கும் வீட்டைக் காப்புறுதி செய்வதற்கு உரிமை உண்டு
3. ஆதனமானது பல கம்பனிகளில் காப்புறுதி செய்யப்படுகின்ற போது அவ் ஆதனத்திற்கு இழப்பீடு ஒன்று ஏற்படும் கட்டத்தில் ஒவ்வொரு கம்பனியிடம் இருந்தும் தனித்தனியாக இழப்பீட்டை பெற முடியும்
4. தொழில் வழங்குனர் தமது ஊழியர்களைக் காப்புறுதி செய்ய முடியும்
5. இழப்பீட்டுத் தத்துவமானது ஆயுளுறுதிக்கும் பொருத்தமானதாகும்

(…….)

**பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக**

14. காப்புறுதி வணிகத்தின் பயனுறுதித் தன்மைக்கு காப்புறுதிக் கொள்கைகள் முக்கியமானவையாகும். அவ்வாறானகாப்புறுதிக் கொள்கைகள் நான்கிணை எழுதுக

1.……………………………….2. …………………………………….

3. ……………………………….4. …………………………………….

**பகுதி** – II

01. காப்புறுதி தொடர்பில் பின்வரும் பதங்களை விளக்குக

1. இடரும் காரணமும் (Risk and cause)

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
…………………………………………………………………………………………..

*2. நட்டங்களும் சேதங்களும்* (Loss and Damages)

(2012 / 04/i/ஆ)

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

*02. பின்வருவன தொடர்பில் காப்புறுதியின் அனுகூலங்களை தனித்தனியாக விளக்குக*

*1. தனிப்பட்டோர் மற்றும் குடும்பம்* (Individual and family)

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………….

*2. வணிக நிறுவனம் (அலகு)* (Business Entity)

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

*03. காப்புறுதியின் மூலம் வணிக நிறுவனங்களுக்குக் கிடைக்கும் இரண்டு அனுகூலங்களை விபரிக்குக* (2016 / 03 / v/ ஆ)

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

*04. காப்புறுதியின் மூலம் தனிப்பட்டவர்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் கிடைக்கும் பயன்கள் யாவை? என விளக்குக*

(2007/ B – I / 06 / ii)

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………..

*05.* *சிறு குறிப்பு எழுதுக*

*அண்மைக்காரணி* (2008 / B – II / 05 / ஆ/ I / 02)

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

*06.* *பின்வரும் காப்புறுதித் தத்துவங்களை உதாரணங்களுடன் விளக்குக* (2010 / B – I / 06 / I )

*1 காப்புறுதி செய்யத்தக்க நலன்* *2. மிக்குயர் நன்நம்பிக்கை*

*3. அண்மைக்காரணி*

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

*07.* *தனஸ்ரீ என்பவர் தனது மனைவியின் மீது ஒரு முழுமையான ஆயுளுறுதிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொண்டார். பின்னர் ஒரு கட்டடத்தில் மனைவி தனஸ்ரீயிடமிருந்து விவாகரத்தைப் பெற்றுக்கொண்டார். சில காலத்தின் பின்னர் அவள் இறந்து விட்டாள். காப்புறுதி செய்யப்பட்ட அத்தொகையை தனஸ்ரீக்கு கொடுப்பதற்கு அக்காப்புறுதிக் கம்பனி பொறுப்புடையதா? உமது விடைக்கான காரணங்களைத் தருக?* (2013 / 04 / I / அ)

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

*08.* *ஆயுளுறுதிக்கும் ஏனைய காப்புறுதி பூட்கைகளுக்கும் இடையிலான ஆறு வித்தியாசங்களை தருக?* (2008 / B – I / 02)

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

*09.* *அ. ஆயுட் காப்புறுதி மற்றும் மோட்டார் வாகனக் காப்புறுதி என்பன தொடர்பில் நட்டஈட்டைக் கோரும் போது இவை ஒவ்வொன்றிலும்*

*காப்புறுதி செய்வோர் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் இரண்டு வீதம் விளக்குக*

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

*ஆ. சந்திரஸ்ரீ என்பவர் ஒரு தொழில்சார் வாத்தியங்கலைஞரும், பாடகருமாவார். இவர் உள்ளூர் இசை நிகழ்ச்சியில்பங்குபற்றுவதற்காக அடிக்கடி தனது சொந்த வாகனத்தில் பயணிக்கின்றார். அத்தோடு வெளிநாட்டு இசை நிகழ்ச்சி களிலும் கூட பங்குபற்றுகின்றனர். சந்திரஸ்ரீ முகங்கொடுக்கக் கூடிய நான்கு இடர்களைப் பெயரிடுக. அவ்விடர்களை உள்ளடக்கூடியவாறு அவர் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதிப் பத்திரங்களை (ஒப்பந்தங்களை) குறிப்பிடுக* (2015 / 04 / i)

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

*10. சங்கீதன் என்பவரின் கார் விபத்துக்கு உள்ளாகியதால் அவருக்கு ரூபா 1,200,000 நட்டம் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டது. அவர் ரூபா 2,000,000 பெறுமதியான இக்காரை காப்புறுதியாளர்களான* SRC *இடமும்* JSA

*இடமும் முறையே ரூபா1,800,000 இற்கும் ரூபா 1,200,000க்கும் காப்புறுதி செய்துள்ளார். இரு காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் வாகனத்தின் முழுமையான இழப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியுமா? உமது விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?* (2014 / 04 / I / அ)

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

*11. நபர் ஒருவர் தனது சொந்த சொத்துக்கள் சிலவற்றை* X *என்ற காப்புறுதிக்கம்பனியில் காப்புறுதி செய்தார்.* X *கம்பனியானது இந்த ஆதனங்களை* Y *என்ற காப்புறுதிக் கம்பனியில் காப்புறுதி செய்திருந்தது. இவ்வகையான காப்புறுதிக்கு வழங்கும் பெயர் யாது? இவ்வகையான காப்புறுதியின் பயன்கள் யாவை?* (2009 / B – I / 05 / ii)

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

*12. ஒப்புறுதி, மீள்காப்புறுதி எனும் பதங்களினால் அறியப்படுவது என்ன?*
(2014 / 04 / I / ஆ)

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

*13. பியசீலி என்பவர் தனது சுவீகாரக் குழந்தையான வசந்தனுக்கு ஆயுளுறுதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொண்டார். குழந்தைப்பருவத்திலிருந்து காணப்பட்ட ஒரு நோயினால் வசந்தன் 26 வயதில் இறந்துவிட்டான். காப்புறுதித்தத்துவங்களின் அடிப்படையில் வசந்தனின் ஆயுள்காப்புறுதிப்பத்திரம் தொடர்பில் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதில் பியசீலி எதிர்நோக்கக்கூடிய இரண்டு பிரச்சினைகளை சுருக்கமாக விளக்குக* (2017 / BII / 4 – I – அ)

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

*14. பொதுமக்கள் பொறுப்புக்காப்புறுதி என்றால் என்ன? என்பதனை விபரித்து அதற்கு உதாரணம் ஒன்று தருக* (2017 / BII / 4 – 1 – ஆ)

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………